அதேபோல் திண்டுக்கல் மருத்துவமனையில் 15 வருடங்கள், 20 வருடங்கள் என்று பணியாற்றக்கூடிய டாக்டர்கள் இருக்கிறார்கள். அது பல்வேறு வகையிலே அரசினுடைய திட்டங்கள் செயல்படாமல் இருப்பதற்கும், அங்கே மருத்துவ மனையில் சில தவறுகள் ஏற்படுவதற்கும் ஒரு காரணமாக இருக்கிறது. எனவே 5 ஆண்டுகளுக்கு மேல் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றக்கூடிய டாக்டர்கள் அரசு விதியின்படி மாற்றப்படவேண்டும் என்ற முடிவை விரைவில் அமல் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்து இருக்கிறது அதையும் மீறி அவர்கள் இருப்பார்களானால் நிச்சயமாகக் கவனித்து நடவடிக்கை எடுக்கும். அப்படிப்பட்ட மருத்துவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.

(இ) ஆதிதிராவிடர் நலன்களுக்காக நத்தம் புறம்போக்கு நிலங்கள் இடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சோலைராசு "நாடெங்கும் உள்ள நத்தம் புறம் போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமித்து விட்டதால், ஆதி-திராவிடர் நலனிற்காக மருத்துவமனை, கல்விக்கூட விடுதிகளுக்கான நிலங்கள் கிராமங்களில், கிடைக்கப் பெறாமல் சமுதாயப்பணிகள் தடைப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களின் கவலை குறித்து" கவன ஈர்ப்பு கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லாததால் விவர அறிக்கை அவையில் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை.

நத்தம் புறம்போக்கு நிலங்கள் இல்லாத ஊர்களில் ஆதி-திராவிடர்களின் வீட்டு மனைக்காகவும், பள்ளிக்கட்டிடங்கள், விடுதிகள், மயானப் பாதை வசதி அமைக்கவும் தனியார் நிலங்கள் அரசு செலவில் கையகப்படுத்தப்படுகின்றன. ஆதி-திராவிட நலனிற்காக மருத்துவ மனை அமைக்க நத்தம் புறம்போக்கு மனை எதுவும் ஒதுக்கப்படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக ஆதி-திராவிடர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக செலவு செய்த தொகை, நில எடுப்பு செய்த பரப்பளவு, வழங்கப்பட்ட பட்டாக்கள் விவரம் கீழ்கண்டவாறு உள்ளது :

வருடம்.	செலவுத் தொகை (ரூபாய் லட்சத்தில்.)	நில எடுப்பு செய்த பரப்பளவு. ஏ. செ.	வழங்கப் பட்ட பட்டாக்கள்,
(1)	(2)	(3)	(4)
1984-85	115.91	615.00	21508
1985-86	111.15	744.11	18057
1986–87	123.19	931.47	22020

[1987 நவம்பர் 16

2. நத்தம் புறம்போக்கு நிலங்களை பலர் ஆக்கிரமிப்பு செய்ததினால் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், விடுதிகளுக்கு நிலங்கள் கிடைக்கவில்லை என்பது குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப்பெறவில்லை.

3. ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், விடுதிகள் ஏற்படுத்த எந்த ஊரில் நத்தம் புறம்போக்கு நிலங்கள் தேவைப்பட்டு அது கிடைக்காமல் மற்றவர் ஆக்கிரமித்துள்ளனர் என்று அரசுக்கு தெரிவித்தால் இது குறித்து தக்க மேல் நடவடிக்கையை அரசு எடுக்கும்.

(ஈ) குறிஞ்சிப்பாடி ஒன்றியம், பெருமாள் ஏரிக்கு தண்ணீர் வரும் வாய்க்கால் தூர்ந்துள்ளது குறித்து.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''குறிஞ்சிப்பாடி ஒன்றியப் பகுதியிலுள்ள பெருமாள் ஏரிக்குத் தண்ணீர் வரும் வாய்க்காலில் காட்டாமணி செடி வளர்ந்து வாய்க்கால் தூர்ந்தது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

வாலாஜா ஏரியின் உபரி நீர்க்கால்வாயான பெருவளூர் கால்வாய் பெருமாள் ஏரியின் முக்கிய வரத்துக்கால் ஆகும். பெருமாள் ஏரியினை அடையும் முன் சுமார் 4 கி.மீ. நீளத்திற்கும் இக்கால்வாயினில் காட்டு இலாக்காவினர் கருவேல மரங்களை 6 வருடங்களுக்கு முன் நட்டு, அவைகள் வளர்ந்து நீர்வரத்தை பாதிக்கின்றன. இது தவிர சீமைக் காட்டாமணி செடிகளும் வளர்ந்து கால்வாய் தூர்ந்துபோய் உள்ளது. இப்பொருள் சம்பந்தமாக 9/86-லேயே காட்டு இலாக்காவிற்கு தெரியப்படுத்தி, 4–11–1986-ல் பொதுப்பணித்துறை மற்றும் வன அதிகாரிகள் தலத்தினை கூட்டாகப் பார்வையிட்டுள்ளனர். மரங்களை அப்புறப்படுத்த 29–10–1987-லும் மாவட்ட வன அலுவலர் நினைவூட்டப்பட்டு இருக்கிறார். செயற் பொறியாளர் அவர்களை இது குறித்து மீண்டும் வன இலாக்கா அலுவலருடன் கலந்து பேசி, மரங்களை நீக்க நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளார். மரங்களை அப்புறப்படுத்திய பின், சீமைக்காட்டாமணிச் செடிகளையும் சேர்ந்துள்ள தூரையும் கனரக இயந்திரங்களின் உதவியுடன் நீக்கப்படும்.